செ.வெ.எண்: 985/2017 நாள்: 22.12.2017

**கன்னியாகுமரி மாவட்டம்**

**டி.என்.ஏ. சோதனை மூலம் உறுதி செய்யப்பட்ட 5 மீனவர்களின் உடல்களை குமரி மாவட்டத்திற்கு கொண்டு வருவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. மாவட்ட ஆட்சித்தலைவர் திரு. சஜ்ஜன்சிங் ரா.சவான் இ.ஆ.ப., அவர்கள் தகவல்.**

டி.என்.ஏ. சோதனை மூலம் உறுதி செய்யப்பட்ட குமரி மாவட்டத்தை சார்ந்த 5 மீனவர்களின் உடல்களை சொந்த ஊர்களுக்கு கொண்டு வருவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது என மாவட்ட ஆட்சித்தலைவர் திரு. சஜ்ஜன்சிங் ரா.சவான் இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்தார்.

கேரளா மாநிலத்திலுள்ள பல்வேறு மருத்துவமனைகள் மற்றும் மருத்துவ கல்லூரிகளில் ஒகி புயலால் பாதிக்கப்பட்டு கடலில் இருந்து மீட்கப்பட்ட மீனவர்களின் உடல்கள் பாதுகாக்கப்பட்டு வருகிறது. பாதுகாக்கப்பட்டு வரும் மீனவர்களின் உடல்கள் டி.என்.ஏ சோதனை மூலமாக உறுதி செய்யப்பட்டு உறவினர்களிடம் ஒப்படைக்கும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. அதனடிப்படையில் ஏற்கனவே கன்னியாகுமரி மாவட்டம், அகஸ்தீஸ்வரம் வட்டம், மணக்குடி கிராமத்தை சேர்ந்த அந்தோணிதாசன் என்பவரின் மகன் ஆன்றனிராஜ் என்பவரது உடல் ஒப்படைக்கபட்டுள்ளது.

தற்போது டி.என்.ஏ சோதனை மூலம் குமரி மாவட்டத்தை சேர்ந்த 5 மீனவர்களின் உடல்கள் உறுதி செய்யப்பட்டுள்ளது. தூத்தூர் பகுதியை சேர்ந்த கிளிட்டஸ் மற்றும் மணக்குடி பகுதியைச் சேர்ந்த மைக்கேல் அமீன் ஆகியோரது உடல்கள் திருவனந்தபுரம் மருத்துவக் கல்லூரி மருத்துவமனையிலும், குளச்சல் பகுதியை சேர்ந்த ஜஸ்டின் பாபு மற்றும் தூத்தூர் பகுதியை சேர்ந்த இருதய தாசன் ஆகியோரது உடல்கள் வேப்பூர் மருத்துவமனையிலும் மற்றும் நீரோடி பகுதியை சேர்ந்த அலெக்ஸாண்டர் என்பவரது உடல் கொச்சி மருத்துவமனையிலும் பாதுகாக்கப்பட்டு வருகிறது.

டி.என்.ஏ மூலம் உறுதி செய்யப்பட்ட குமரி மாவட்டத்தை சேர்ந்த 5 மீனவர்களின் உடல்களை சொந்த ஊர்களுக்கு கொண்டு வருவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது என மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் தெரிவித்தார்.

---

வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், கன்னியாகுமரி மாவட்டம்.